**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 183/2024 P.W. 6/L.W.6**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. அனிஷ் மில்லர் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து எலக்ட்ரீசியனாக வேலைச் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். 19.12.2023 ம் தேதி ஆலஞ்சி, அடப்பூர் அருகே அசோக் டார்வின் என்பவரது வீட்டின் அருகே வைத்து இரவு 08.00 மணி அளவில் கருங்கல் போலீசார் சம்பவயிடத்தைப் பார்வையிட்டு படம் வரைந்து சம்பவயிடத்திலிருந்து 2 கற்களை கைப்பற்றினார்கள். அந்த பார்வை மகசர் மற்றும் அத்தாட்சியில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள்.

2. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் எனது தந்தை சவேரியார் அடிமை என்பவரும் கையொப்பம் செய்தார். **பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அத்தாட்சியில் உள்ள 1 வது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. அசோக் டார்வின் எனது மைத்துனர் என்றால் இல்லை. எனக்கு வேலைச் செய்வதில் பழக்கம். எனக்கு எலக்ட்டிரிக்கல் வேலை சொல்வார்கள், அதில் பழக்கம். எனது வீடு சம்பவயிடத்திலிருந்து 15 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். இன்றையதினம் என்னை நீதிமன்றத்திற்கு அசோக் டார்வின் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். அன்றையதினம் எதற்காக நான் சம்பவயிடம் வந்தேன் என்றால் வேலைச் செய்ய சாதனம் வாங்க கடைக்கு வந்தேன்.

2. நான் கையெழுத்து போட்டதாக சொன்னதைப் பொறுத்து அந்த நேரத்தில் அருகிலிருந்த நபர்கள் எத்தனை பேர்கள் கூடியிருப்பார்கள் என்றால் 10 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் சம்பவயிடத்தை சுற்றியுள்ள நபர்கள் என்றால் சரிதான். என்னை சாட்சி கையொப்பம் போடவேண்டுமென்று தான் கூட்டிச்சென்றார்கள் என்றால் சரிதான். போலீஸ் தான் கூட்டிச் சென்றார்கள். வேறு யாரிடமும் போலீசார் சாட்சி கையொப்பம் போடச் சொன்னார்களா என்றால் போடச்சொன்னார்கள், யாரும் போடவில்லை.

3. மாவட்டத்தில் பரவலாக எல்லா வீடுகளிலும் கருங்கல் இருக்கும் என்றால் சரிதான். நான் போகும் போது இரத்தம் எதுவும் சிதறிக்கிடந்தா என்றால் இல்லை. நான் காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்ததாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா1 எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்ததை படித்துப்பார்க்கவில்லை என்றால் சரிதான். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 183/2024 P.W. 7/L.W.7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சவேரியார் அடிமை | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து எலக்ட்ரீசியனாக வேலைச் செய்து வருகிறேன். 19.12.2023 ம் தேதி மாலை 08.00 மணியளவில் கருங்கல் போலீசார் நீர்வக்குழியில் உள்ள சம்பவயிடத்தைப் பார்வையிட்டு அது குறித்து எழுதி என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் சம்பவயிடத்திலிருந்து 2 கற்களை போலீசார் கைப்பற்றினார்கள், அதிலும் நான்கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **அந்த கையொப்பம் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னுடன் எனது மகன் அனிஷ் என்பவரும் கையொப்பம் செய்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

எனக்கு 3 குழந்தைகள் உள்ளார்கள். அ.சா2 அஜிதா எனது மகள். எனக்கு முன் சாட்சி சொல்லிப்போன அனிஷ் மில்லர் எனது மகன் ஆவார். அ.சா1, அசோக் டார்வின் மேற்படி

அஜிதாவின் கணவர் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவல்நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன். சம்பவயிடத்திலிருந்து எங்கள் வீடு 15 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான்.

2. அ.சா1ன் வீட்டின் 4 புறமும் காம்பவுண்ட் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வீட்டில் யாரும் வசிப்பதில்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து என் மருமகன் மற்றும் அவர் உடன்பிறந்தவர்களுக்கு 500 மீட்டர் தொலைவில் வரிசையாக வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அ.சா3. சினேகப்பூ என் மருமகன் கூட தான் இருக்கிறார் என்றால் சரிதான். நான் என் மருமகனின் வேண்டுகோளுக்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. சம்பவயிடத்தில் நிறைய ஆட்கள் கூடினார்கள் என்றால் சரிதான். அவர்கள் அருகிலுள்ள நபர்கள்என்றால் சரிதான். அவர்கள் யாரும் சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். எங்களை கூட்டிக்கொண்டு சென்றதால் போலீசார் அவர்களிடம் கையெழுத்துக்கேட்கவில்லை என்றால் சரிதான். நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.